## சுருக்கம்

பொதுப்பணிகள்–பள்ளிக் கல்வித் துறை –கருணை அடிப்படை பணிநியமனம்– திரு.M.ரவி (த/பெ (மறைந்த) திரு.B.மணிவண்ணன்) என்பவர் 06.07.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித் (தொக3(1))துறை

அரசாணை( 2டி ) எண்.02

நாள் 23.01.2020
திருவள்ளுவர் ஆண்டு–2051
விகாரி வருடம், தை–9
படிக்கப்பட்டவை.

1. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.37262/ஜே4/2019, நாள் 04.10.2019.
2. அரசாணை(நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

******

**ஆணை:–**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.M.ரவி என்பவர் முதன் முதலில் பதிவறை எழுத்தராக 10.10.2009 முதல் நியமனம் செய்யப்பட்டு, பின்னர் 14.02.2012 முற்பகல் முதல் ஆய்வக உதவியாளராய் பணியமர்த்தப்பட்டார். மனுதாரர் முதன்முதலில் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கோரி விண்ணப்பித்த நாளிலேயே இளநிலை உதவியாளர் பணிக்குத் தேவையான S.S.L.C. தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்ததால் ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து பணிமாற்றம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக 06.07.2017 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டவரின் தந்தை திரு.B.மணிவண்ணன் என்பவர் 09.08.1996–ஆம் நாளன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.M.ரவி என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 17.06.1977 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. தருமபுரி மாவட்டம், அஞ்சே அள்ளி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து 09.08.1996–ஆம் நாளன்று காலமான திரு.B.மணிவண்ணன் என்பாரின் மூன்றாவது வாரிசான அவரது மகன் திரு.M.ரவி என்பவருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 06.07.2017 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்திட பார்வை

இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறவேண்டிய அவசியம் எழவில்லை என்பதால், அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவரது பணியினை வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.23128/ட்டி1/2019, நாள் 10.12.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.41479/ஜி2/2019 , நாள் 03.01.2020—ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை—6.
தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
நகல்
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி2) துறை, சென்னை—9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி1) துறை, சென்னை—9 .
பள்ளிக் கல்வித் (அநுமு பிரிவு)துறை, சென்னை—9.
உதிரி/ இருப்புக்கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.